# பரீட்சகரின் அறிக்கை

## AA2 பரீட்சை – 2018 யூலை

## (AA25) வியாபாரச் சட்டமும் ஒழுக்கநெறிகளும்

### பகுதி A

**வினா இல. 01**

இவ்வினா 20 புள்ளிகளுக்கான 10 OTQs இனைக் கொண்டிருந்தது.

இவ்வினாவுக்கு அதிகளவான பரீட்சார்த்திகள் விடையளிக்க முயற்சித்திருந்தனர். அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு ஒதுக்கப்பட்டிருந்த மொத்தப் புள்ளிகளில் அரைவாசிக்கும் மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

சில பரீட்சார்த்திகள் வினா இலக்கங்களான **1.4, 1.6** மற்றும் **1.7** ஆகியவற்றில் காணப்பட்ட **கருதப்படாதது, அமையாதது, முடியாதது** என்னும் பதங்களை கவனிக்கத் தவறியதன் காரணமாக அவ்வினாக்களுக்குத் தவறான விடைகளை வழங்கியிருந்தனர். வினா இல. **1.4** இல், ‘‘நன்கொடை உறுதி’’ என்பது எழுத்து மூலம் வெளிப்படையாக உருவாகின்ற முகவராண்மைக்கான ஓர் ஆவணமாகக் கருதப்படுவதில்லை என்பதைப் பரீட்சார்த்திகள் விளங்கிக்கொள்ளல் வேண்டும்.

குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் வினா இலக்கங்கள் **1.8** மற்றும் **1.10** ஆகியவற்றுக்குச் சரியாக விடையளிக்கத் தவறியிருந்ததைதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

மாவட்ட நீதிமன்றங்களால் கையாளப்படும் விடயங்கள் பற்றிய அறிவு காணப்படாததால் பெரும்பாலான பரீட்சார்த்திகள் வினா இல. **1.8** இற்கு தவறான விடை அளித்திருந்தனர். கிட்டத்தட்ட பரீட்சார்த்திகளில் அரைவாசிப் பேர் வினா இல. **1.10** இற்குச் சரியான விடை அளித்திருந்தனர். வினா இல. **1.10** போன்ற ஒரு வினாவுக்கு விடையளிப்பதற்கு 1954 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கடை மற்றும் அலுவலக ஊழியர்கள் சட்டத்தின்கீழ், நிறுவனம் ஒன்றில் வேலைக்குச் சேர்ந்த திகதிக்கு இணங்க, ஊழியர் ஒருவரால் வருடாந்த லீவாகப் பெற்றுக்கொள்ள உரித்துடைய நாட்களின் எண்ணிக்கை பற்றிய நல்ல விளக்கத்தினைப் பரீட்சார்த்திகள் கொண்டிருத்தல் வேண்டும். **பகுதி A** ஆனது சித்தியடைவதற்கான புள்ளியை அடைவதற்கு பெரியளவில் பங்களிப்புச் செய்வதால் பரீட்சார்த்திகள் உயர்ந்தளவு புள்ளிகளைப் பெற்றுக் கொள்வதற்காக கிட்டத்தட்ட முழுப் பாடத்திட்டம் தொடர்பிலும் ஆழமான அறிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**இவ்வினாவுக்கான பரீட்சார்த்திகளின் ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமாக இருந்தது.**

### பகுதி B

**வினா இல. 02**

இவ்வினா முகவராண்மைச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவை விளங்கிக்கொள்ளத் தவறியிருந்தனர். குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் இவ்வினாவானது பின்னேற்பு (ratification) மூலம் உருவாகும் முகவராண்மையை அடிப்படையாகக் கொண்டது என்பதையும் முதல்வர் மூலமான வெறும் பின்னேற்பானது பின்னேற்பு மூலமான முகவராண்மையை (agency by ratification) உருவாக்குவதற்கு போதுமானதாக இருக்காது என்பதையும் அடையாளங் காணத்

தவறியிருந்தனர் (இது குறிப்பிட்ட விதிகளால் ஆளப்படுகிறது). அதிகளவான பரீட்சார்த்திகள் **பியால்** என்பவர் **சுனில்** என்பவரை முதல்வராகக் குறிப்பிடாது ஒப்பந்தமொன்றில் உள்நுழைந்தது பற்றிச் சரியான விபரிப்பை வழங்குவதற்குத் தவறியிருந்தனர். பரீட்சார்த்திகள் தரப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எழுக்கூடிய நியாயமான முடிவு பற்றி கருத்திற்கொள்ளுதல் வேண்டும்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமானதல்ல.**

## வினா இல. 03

இது ஒரு இலகுவான நேரடி வினாவாக அமைந்திருந்த போதிலும் இவ்வினாவுக்கான செயலாற்றுகை சராசரி மட்டத்திலேயே காணப்பட்டது. சில பரீட்சார்த்திகள் தொழில்சார் ஒழுக்கநெறிகளின் அடிப்படைக் கோட்பாடுகள் இரண்டினைக் குறிப்பிட்டிருந்த போதிலும் அவர்கள் அதனை விபரித்திருக்கவில்லை. சில பரீட்சார்த்திகள் கணக்காளர் ஒருவரது தொழில்சார் ஒழுக்கநெறிகளின் அடிப்படைக் கோட்பாடுகள் பற்றிய போதுமான அறிவைக் கொண்டிருக்கவில்லை. பரீட்சார்த்திகள் தொழில்சார் ஒழுக்கநெறிகளின் ஆறு அடிப்படைக் கோட்பாடுகளான நேர்மை, பாரபட்சமின்மை, தொழில்நுட்ப ஆற்றல், தகுந்த கவனிப்பு, அந்தரங்கத்தன்மை மற்றும் சுயாதீனம் ஆகியவற்றை விளங்கிக்கொள்ளுதல் வேண்டும்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை ஓரளவு திருப்தியானது.**

## வினா இல. 04

நடப்பு விவரணம் ஒன்றின் ஊடாக **கைமாற்றத்தகு சாதனங்கள்** பற்றிய அறிவு இவ்வினாவின் மூலம் பரீட்சிக்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளிக்க முயற்சித்திருந்ததுடன் திருப்திகரமான விடைகளையும் வழங்கியிருந்தனர். பிரிவு 80 இன் அடிப்படையில், கவனயீனமாக நல்லெண்ண அடிப்படையில் குறுக்குக் கோடிடப்பட்ட காசோலை ஒன்றிற்கு வங்கியாளர் கொடுப்பனவைச் செய்யுமிடத்து, அதிகாரமளிக்கப்படாத நபர் ஒருவரால் பணம் பெறப்பட்டிருப்பினும்கூட காசோலையின் உரிமையாளரிடமிருந்து வங்கி பாதுகாப்புப் பெறுகிறது.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமானதல்ல.**

## வினா இல. 05

இவ்வினா **கம்பனிச் சட்டத்தை** அடிப்படையாகக் கொண்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்தனர். கம்பனி என்பது செயற்கையானதொன்றாக இருந்த போதிலும் அது ஒரு சட்டரீதியான நபர் என்பதைப் பரீட்சார்த்திகள் விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். ஒரு கம்பனி கூட்டிணைக்கப்படும்போது அதன் பங்குதாரர்கள், பணிப்பாளர்கள் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து மாறுபட்ட ஒரு செயற்கையான சட்டரீதியான நபராக அது மாறுகின்றது. கம்பனி ஒன்று சட்ட ஆளுமை எண்ணக்கருவின் கீழ் அதன் சொந்தப் பெயரில் வழக்குத் தொடர முடியும் என்றும் வழக்குத் தொடர வேண்டும் என்றும் பல பரீட்சார்த்திகளால் சரியாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமானது.**

## வினா இல. 06

இது **பங்குடமைச் சட்டத்துடன்** தொடர்புடைய ஓரளவு இலகுவான ஓர் வினாவாகும். இது பங்காளர்களின் கடமைகள் மற்றும் உரிமைகளை ஆராயுமாறு கேட்டிருந்தது. பங்காளர்களின் உரிமைகள் மற்றும் கடமைகளை பங்குடமை உடன்படிக்கையே தீர்மானிக்கிறது என்பதைப் பரீட்சார்த்திகள் விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். அங்கு ஒரு உடன்படிக்கை இல்லாதவிடத்து, பங்குடமைச் சட்டம்

பிரயோகிக்கப்படும். இச்சட்டத்தின் அடிப்படையில், பங்காளர்களின் கடமைகளில் ஒன்று ஏனைய பங்காளர்களுக்கு அவருடைய கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய உண்மைக் கணக்குகளையும் முழுமையான தகவல்களையும் சமர்ப்பிக்க வேண்டும் என்பதாகும். மறு பக்கத்தில், ஒவ்வொரு பங்காளரும் பங்குடமையை பற்றிய சகல கொடுக்கல் வாங்கல்களிலிருந்தும் அவரால் பெறப்பட்ட சகல நன்மைகளும் தொடர்பான முழுத் தகவல்களையும் வெளிப்படுத்த வேண்டும். பல பரீட்சார்த்திகள் **அமல்** என்பவர் இரகசிய இலாபம் ஒன்றை உழைத்துள்ளார் எனவும் அவர் பங்குடமையின் கடமைகளில் ஒன்றை மீறியிருக்கிறார் எனவும் சரியாகக் குறிப்பிட்டிருந்தனர்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமானது.**

## <u>பகுதி C</u>

### வினா இல. 07

**(a)** இது **பொருட்கள் விற்பனைக் கட்டளைச் சட்டத்துடன்** தொடர்புடைய ஓரளவு இலகுவானதோர் வினாவாக இருந்ததுடன் இங்கு உட்கிடை நிபந்தனைகள் பற்றி ஆராயுமாறு கூறப்பட்டிருந்தது. விபரிப்புகள் மற்றும் மாதிரிக்கு இணங்க விற்பனைப் பொருட்கள் பற்றிய நிபந்தனைகள் இவ்வினாவுக்குப் ஏற்புடையதாக இருந்தன. சில பரீட்சார்த்திகள் மாதிரி பற்றிய நிபந்தனையைக் குறிப்பிட்டிருந்தனராயினும் விபரிப்பு மீதான நிபந்தனை பற்றி குறிப்பிட்டிருக்கவில்லை. மாதிரி அதேபோன்று விபரிப்பு மூலமாக பொருட்களின் விற்பனை ஒன்று நடைபெறும்போது அப்பொருளானது விபரிப்புடன் மட்டுமன்றி மாதிரியுடனும் ஒத்திசைவானதாக இருத்தல் வேண்டும் என்பதைப் பரீட்சார்த்திகள் விளங்கிக்கொள்ளல் வேண்டும்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமானது.**

**(b)** இப்பகுதி **சர்வதேச வர்த்தகம்** தொடர்பில் பரீட்சார்த்திகளின் அறிவினைப் பரீட்சிப்பதற்காக வழங்கப்பட்டிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் நாணயக் கடிதம் பற்றிச் சரியாகக் குறிப்பிட்டிருந்தனர். பரீட்சார்த்திகள் சர்வதேச வர்த்தகத்தில் பயன்படுத்தக்கூடிய மாற்றுண்டியல், கூட்டு உடன்படிக்கை, திறந்த கணக்குகளில் கொடுப்பனவு, முற்பணக் கொடுப்பனவு மற்றும் இலத்திரனியல் வர்த்தகம் போன்றவற்றையும் பொருத்தமான கொடுப்பனவு முறையாகப் பயன்படுத்த முடியும் என்பதையும் விளங்கிக்கொள்ளுதல் வேண்டும்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமானது.**

### வினா இல. 08

இவ்வினா **காப்புறுதிச் சட்டம்** பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சிப்பதற்காக வழங்கப்பட்டிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் காப்பீடு செய்யும் ஆர்வம் பற்றி விபரித்து இவ்வினாவுக்கு வெற்றிகரமாக விடையளித்திருந்தனர். பல பரீட்சார்த்திகள் **அமாலி**யால் அவளின் கணவரது ஆயுளுக்கு காப்புறுதிட முடியுமெனவும் **சுனாலி**யால் தனது சகோதரன் மற்றும் பெற்றோரின் ஆயுளுக்காகக் காப்புறுதியிட முடியாது எனவும் சரியாகக் குறிப்பிட்டிருந்தனர். காப்புறுதி ஒப்பந்தமொன்று காப்புறுதி செய்யும் ஆர்வத்தினால் ஆதரிக்கப்படல் வேண்டும் அல்லாவிடின், காப்புறுதி ஒப்பந்தம் செல்லுபடியற்றதாகிவிடும் என்பதைப் பரீட்சார்த்திகள் விளங்கிக்கொள்ளல் வேண்டும்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமானது.**

### வினா இல. 09

**(a)** பெரும்பாலான பரீட்சார்த்திகள் **பகுதி (i)** இற்காக, நுகர்வோர் விவகார அதிகாரசபையின் இரண்டு பிரதான தொழிற்பாடுகளை எழுதியிருந்தனர்.

குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் **பகுதி (ii)** இற்காக, நுகர்வோர் விவகார அதிகார சபையினால் விதிக்கப்பட்டவாறு வர்த்தகர்களின் கடப்பாடுகள் இரண்டினைக் குறிப்பிடுவதற்குத் தவறியிருந்தனர். நுகர்வோர் விவகார அதிகாரசபையினால் விதிக்கப்பட்டவாறு வர்த்தகர்களின் கடப்பாடுகளாக பின்வருவன கருதப்பட முடியும் என்பதைப் பரீட்சார்த்திகள் விளங்கிக்கொள்ள வேண்டும் :

(1) வியாபாரத் தலத்தில் இருக்கின்ற பொருட்களின் உயர்ந்தபட்ச சில்லறை மற்றும் மொத்த விற்பனை விலைகளைக் காட்சிப்படுத்தல்

(2) கொள்வனவாளர் கோருமிடத்து, விற்பயைாளரால் விற்பனை செய்யப்பட்ட எந்தவொரு பொருளுக்குமான பற்றுச்சீட்டை வழங்குதல்

(3) தாமாகவே அதிகாரசபையில் பதிவுசெய்து கொள்ளல்

(4) அதிகாரசபையால் வழங்கப்பட்ட அறிவித்தல்களைக் காட்சிப்படுத்தும் பொருட்டு அவரது வியாபாரத் தலத்திலுள்ள பொருத்தமான ஓர் இடத்தில் அறிவித்தல் பலகையை பேணுதல்

(5) அவரது வியாபாரப் போக்கில் எந்தவொரு நுகர்வோரையோ அல்லது வர்த்தகரையோ தவறாக வழிநடத்தவோ அல்லது ஏமாற்றவோ கூடாது.

(6) அவரால் விற்பனை செய்யப்பட்ட பொருட்களுடன் தொடர்புடைய எந்தவொரு பிழையான பிரதிநிதித்துவத்தையும் செய்தல் கூடாது.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை ஓரளவு திருப்தியானது.**

**(b)** இவ்வினா தொழிலாளர் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டிருந்ததுடன் நபர் ஒருவர் தனது EPF இற்கான உரிமைக் கோரிக்கை செய்வதற்கான உரித்துடைய சந்தர்ப்பங்கள் 4 இனைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டிருந்தது. பல பரீட்சார்த்திகள் வினாவின் இப்பகுதிக்குரிய முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமானது.**

## <u>பகுதி D</u>

## வினா இல. 10

இவ்வினா 2 பகுதிகளை உள்ளடக்கியிருந்தது. இந்த வினாவின் பகுதி (a) ஆனது ஒப்பந்தச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

### பகுதி (a)

வினாவின் இப்பகுதியானது தரப்பட்ட விவரணத்தின் அடிப்படையில் **மாலா** மற்றும் **குமாரி** ஆகியோருக் கிடையே ஒரு செல்லுபடியான ஒப்பந்தம் இருக்கிறதா என்பதை ஆராயுமாறு கேட்டிருந்தது.

**(i)** பெரும்பாலான பரீட்சார்த்திகள் விருப்ப அறிவிப்பு (offer), விருப்பமின்மை அறிவிப்பு (counter offer) போன்றவற்றைக் குறிப்பிட்டிருந்தனர். பல பரீட்சார்த்திகள் **மாலா** மற்றும் **குமாரி**க்கிடையில் ஓர் செல்லுபடியான ஒப்பந்தம் காணப்படவில்லை என்பதைச் சரியாகக் குறிப்பிட்டிருந்தனர். விருப்பமின்மை அறிவிப்பொன்றைச் செய்வதன் மூலம் விருப்ப அறிவிப்பானது நிராகரிக்கப்படலாம் என்பதையும் விருப்பமின்மை அறிவிப்பானது புதிதான விருப்ப அறிவிப்பு ஒன்றைச் செய்வதன் மூலமோ அல்லது நிபந்தனைகளைத் தளர்த்துவதன் வாயிலாக விருப்ப அறிவிப்பு ஒன்றை ஏற்றுக்கொள்வதன் மூலமோ செய்யப்பட முடியும் என்பதையும் பரீட்சார்த்திகள் விளங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

**மொத்தத்தில், வினாவின் இப்பகுதிக்கான செயலாற்றுகை திருப்திகரமானது.**

**(ii)** வினாவின் இப்பகுதியானது ஏமாற்றம் மூலமான ஒப்பந்தங்களின் முடிவுறுத்துகையை அடிப்படையாகக் கொண்டிருந்தது. இங்கு **பியாலினால்** செய்யப்பட்ட ஹோட்டல் அறை முன்பதிவுக் கொடுப்பனவு தொடர்பில் அவருக்கிருக்கின்ற சட்ட உரிமைகளை ஆராயுமாறு கோரப்பட்டிருந்தது. சில பரீட்சார்த்திகள் ஏமாற்றத்தின் மூலம் ஒப்பந்தமொன்று முடிவுறுத்தப்பட முடியும் என்பதைக் குறிப்பிட்டிருக்கவில்லை. ஒப்பந்தம் ஒன்று செய்யப்பட்டதன் பின்னர் தரப்பினரின் கட்டுப்பாட்டிற்கு அப்பாலுள்ள ஏதாவது ஒரு காரணத்தினால் ஒரு தரப்பினர் ஒப்பந்தத்தைத் தொடர்ந்தும் செயற்படுத்த முடியாதிருப்பின், அவ்வொப்பந்தமானது ஏமாற்றத்தின் மூலம் முடிவுறுத்தப்பட்டுள்ளது எனக் கூறப்படுகிறது.

**மொத்தத்தில், வினாவின் இப்பகுதிக்கான செயலாற்றுகை ஓரளவு திருப்தியானது.**

பகுதி (b)

வினாவின் இப்பகுதியானது பொருட்கள் விற்பனைக் கட்டளைச் சட்டத்தினை அடிப்படையாகக் கொண்டதாகும்.

**(i)** **குசல்** மற்றும் **மாயா**வுக்கிடையில் பொருட்கள் விற்பனை ஒப்பந்தமொன்று காணப்படுகிறதா என்பதை விபரிக்குமாறு கேட்கப்பட்டிருந்தது. சில பரீட்சார்த்திகள், **குசலுக்கும் மாயாவிற்குமிடையே** பொருட்கள் விற்பனை ஒப்பந்தமொன்று இருப்பதாகக் குறிப்பிட்டிருந்தனர் ஆயினும் இந்த ஒப்பந்தம் எதிர்காலப் பொருட்களின் அடிப்படையில் அமைந்திருந்தது என்பதை விபரித்திருக்கவில்லை. பரீட்சார்த்திகள் வினா ஒன்றிற்கு விபரமான விடைகளை அளிக்கும்போது முடிவொன்றுக்கு வருவதற்கான காரணங்களை விபரித்தல் வேண்டும். எதிர்காலப் பொருட்கள் என்பது பொருட்கள் விற்பனை ஒப்பந்தம் ஒன்று செய்யப்பட்டதன் பின்னர், விற்பனையாளரால் தயாரிக்கப்பட வேண்டிய அல்லது உற்பத்தி செய்யப்பட வேண்டிய அல்லது கொள்வனவு செய்யப்பட வேண்டிய பொருட்களாகும்.

**மொத்தத்தில், வினாவின் இப்பகுதிக்கான செயலாற்றுகை திருப்திகரமானது.**

**(ii)** இங்கு **குசல்** மற்றும் **ரவிந்து** ஆகியோருக்கிடையே பொருட்கள் விற்பனை ஒப்பந்தமொன்று காணப்படுகிறதா என்பதை விபரிக்குமாறு கோரப்பட்டிருந்தது. சில பரீட்சார்த்திகள் **ரவிந்து** மற்றும் **குசலுக்கிடையே** பொருட்கள் விற்பனை ஒப்பந்தமொன்று காணப்படுவதாகக் குறிப்பிட்டிருந்த போதிலும் அவ்வொப்பந்தம் இருக்கின்ற பொருட்களின் அடிப்படையிலமைந்த ஓர் ஒப்பந்தமென்பதை விபரித்திருக்கவில்லை. இருக்கின்ற பொருட்கள் என்பது விற்பனை ஒப்பந்தம் செய்யப்படுகின்ற அந்த நேரத்தில் விற்பனையாளருக்குச் சொந்தமானதும் அவரால் வைத்திருக்கப்படுவதுமான பொருட்கள் ஆகும்.

**மொத்தத்தில், வினாவின் இப்பகுதிக்கான செயலாற்றுகை திருப்திகரமானது.**

**(iii)** பெரும்பாலான பரீட்சார்த்திகள் **தயாலுக்கு** கிடைக்கக்கூடிய தீர்வுகள் பற்றிக் குறிப்பிட்டிருந்தனர். பொருளை ஒப்படைக்காமைக்காக **குசலுக்கு** எதிராக **தயாலால்** சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட முடியும், பொருளுக்கான கட்டணத்தை மீளப்பெற முடியும், குறிப்பிட்ட செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும்.

**மொத்தத்தில், வினாவின் இப்பகுதிக்கான செயலாற்றுகை திருப்திகரமானது.**

ஒட்டுமொத்தத்தில், இவ்வினாவுக்கான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை திருப்திகரமாக இருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்காக ஒதுக்கப்பட்ட மொத்தப் புள்ளிகளில் 60 % இற்கும் அதிகமான புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

இவ்வினாவுக்கு விடையளிக்கும்போது, சில பரீட்சார்த்திகள் சம்பந்தமற்ற விடயங்களை எழுதியிருந்ததுடன் வேறு சிலர் வினாவில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களையே விடையாக சமர்ப்பித்திருந்தனர்.

\- - -

**<u>பரீட்சார்த்திகளின் தேர்ச்சி மட்டத்தினை மேம்படுத்தும் பொருட்டு கவனத்திற்கொள்வதற்கான பொதுவான விடயங்கள்</u>:**

**(1)** பாடத்திட்டத்தை முழுமையாகவும் ஆழமாகவும் படிப்பதுடன் புதிய பாட விடயங்கள் மீது கூடிய கவனத்தையும் செலுத்தவும்.

**(2)** வினாவினைப் பல தடவைகள் வாசித்த பின் குறிப்பிட்ட மற்றும் நேரடியான விடைகள் எதிர்பார்க்கப்படுமிடத்து தேவையற்ற விபரிப்புகளை / விபரங்களை எழுத வேண்டாம்.

**(3)** வினைச் சொல் நிரல் ஒன்று வினாப்பத்திரத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்களைத் தவிர ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒவ்வொரு வினைச்சொல்லினைக் கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் வினைச் சொல் நிரலில் தரப்பட்ட வினைச்சொல்லின் வரைவிலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

**(4)** சுய கற்றல் பாடநூல், புத்தகங்கள், கையேடுகள், மடல்கள், சஞ்சிகைகள் மற்றும் பாடத்துடன் சம்பந்தப்பட்ட ஏனையவற்றை படிக்கவும்.

**(5)** விடையெழுதும்போது சரியாக அடையாளம் கண்டு அவற்றை அடிப்படைக் கோட்பாட்டு எண்ணக் கருக்களுடன் ஒப்பிடுவதற்கும் தேவையான ஆற்றல்களை வளர்த்துக்கொள்ளுங்கள்.

**(6)** கையெழுத்து தெளிவாக இருப்பதையும் வினா இலக்கங்கள் உரிய இடத்தில் சரியாகவும் ஏற்றவாறும் இடப்பட்டிருப்பதையும் உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.

**(7)** வினாப்பத்திரத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கடைப்பிடியுங்கள்.

**(8)** கடந்தகால வினாப்பத்திரங்கள் மற்றும் விடைகளைக் கற்பதன் மூலம் உங்கள் அறிவினை மேம்படுத்திக்கொள்ளுங்கள்.

**(9)** முறையான நேர முகாமை.

**(10)** விடைப்பத்திரங்களை ஒப்படைப்பதற்கு முன் வினா இலகங்கள் உரியவாறு உரிய இடங்களில் இடப்பட்டுள்ளனவா என்பதை முறையாகப் பரீட்சிக்கவும்.

**(11)** முன்னாயத்தத்துடனும் வெற்றியடையும் எதிர்பார்ப்புடனும் பரீட்சைக்குத் தோற்றவும்.

- * * * -